"யுஎன்ஜிஏ" (UNGA) அமைப்பின் தமிழ்ப் பிரிவான "ரிஎன்ஜிஏ" (TNGA) அமைப்பானது தமிழர்களுக்காக ஏற்படுத்தியிருந்த மாபெருங்கருத்தரங்கு இன்று 10/11/2007 சனிக்கிழமை மாலை "சிஜிஐஎல்" (CGIL) மண்டபத்தில் Reggio Emilia - Italyயில் நடைபெற்றது.

இங்கு முக்கியமாக இத்தாலிக்குப் புதிதாக ஆட்களை அழைப்பது தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டதோடு, முன்போல் அஞ்சல் அலுவலகங்களை நாட வேண்டியதில்லை என்றும் அங்கு குறிப்பிட்டனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்குக் குறிப்பாக இத்தாலியில் வாழும் மக்களுக்கேற்படும் தேவைகளுக்கேற்ப சேவைகள் தொடர்பாக முழுத்தகவலும் வழங்கப்பட்டது.

இங்கு தவறான கருத்துக்களைத் தெரிவித்து மக்களை ஏமாற்றுவோர் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்கும் படி இவ்வமைப்பாளர்கள் தெரிவித்தார்கள். மேலும் தமிழர்கள் இத்தாலி சட்டமாற்றங்கள் தொடர்பாக தமிழில் தகவல் பெற வேண்டின் "unga2007@libero.it – என்னும் மின் முகவரிக்கு, **தமிழ்ஓலை**" என்ற தலைப்பில் தொடர்புகொண்டால், இதற்கான பதில் உடனுக்குடன் மின்அஞ்சல் மூலம் அனுப்பப்படுமெனவும் அவ்வமைப்பினர் தெரிவித்தனர்.















இவ்வமைப்பு இங்குள்ள தமிழர்களுக்கு, விசாக்கள் தொடர்பாகவும் வேலை தொடர்பாகவும் வீடு வாங்கல் விற்றல் தொடர்பாகவும், கடனுதவி மற்றும் வீட்டுக்கடன் தொடர்பாகவும், "சிறுவர்கள், பெண்கள், இளைஞர்" தொடர்பான சகல விடயங்களிலும், கல்வி, கலை, கலாசார அம்சங்களிலும், ஆவணங்கள் தொடர்பான விடயங்களிலும் சட்ட ஆலோசனைகள் போன்ற பல்வேறு விடயங்களிலும் தம்மை ஈடுபடுத்தி பல்லின மக்களை அங்கத்தினராகக் கொண்டு, கடந்த 8 வருடங்களாக இயங்கி வருகின்றதெனத் தெரிவித்தது.

இத்தாலியில் இருந்து
தகவல் வெளியீட்டுப் பணிமனையூடாக
வதன் "தரிசனம்" கலையகத்திற்காக
10/11/2007